# வறண்ட நிலம் நீரூற்றாய்..



ஒரு விவசாயி தினமும் காலையும், மாலையும் வயலுக்கு வந்து அதை சுற்றி பார்த்துவிட்டு செல்லுவான். இதைப்பார்க்கிற நமக்கு கடின உழைப்பாளி என்று கருதுவோமல்லவா.. இப்படிதான் ஒரு முதியவர் நினைத்துக்கொண்டிருந்தார்.

ஒரு நாள் அந்த முதியவர் அவனைப்பார்த்து தினமும் வயலுக்கு வருகிறாயே என்னத்தைப் பார்க்கிறாய்? என்றார். வயல் விளைந்திருக்கிறதா என்று பார்க்க வந்தேன் என்றான். நல்லது தம்பி, என்ன பயிர் வைத்திருக்கிறாய்? என்று கேட்டதற்கு, ஐயா நான் இது வரைக்கும் எதையும் விதைக்க வில்லை, இது விவசாய நிலம் ஆதலால் ஏதாவது விளையும் என்று நான் பார்க்க வருகிறேன்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த முதியவருக்கு பைத்தியக்கார பதிலாக இருந்தது.. சற்று கோபமாக, ஏய் தம்..பி..பி..பி இது விவசாய நிலமாக இருந்தாலும் நீ எதை விதைக்கிறாயோ அதைதான் அறுக்க முடியும். தானாக ஏதாவது விளையும் என்று நீ எதிர்பார்த்தால் தேவையற்ற முட்செடிகளும், அதின் கோட்டைகளில் காஞ்சொறிகளும் முட்பூண்டுகளும் முளைக்கும்; அது வலுசர்ப்பங்களின் தாபரமும், கோட்டான்களின் மாளிகையுமாயிருக்கும். என்றார்..

**உண்மைதானே..**

மோசம்போகாதிருங்கள், மனுஷன் எதை **விதை**க்கிறானோ அதையே அறுப்பான். கலா-6:7

நிலம் என்றால் இருதயம். முதலாவது பயிர் விளைய நிலம் (இருதயம்) பண்படுத்தப்பட வேண்டும் அதாவது காஞ்சொறிகளும் முட்பூண்டுகளும் சுட்டெரிக்கப்பட்டு உழப்படவேண்டும் அப்பொழுது அது விளைநிலமாக (நல்ல நிலமாக) மாறும்.

மண்ணை பண்படுத்துவதற்கு ஒரு விவசாயி தேவை

இருதயத்தை பண்படுத்துவதற்கு நாதன் இயேசு கிறிஸ்து தேவை

பண்படுத்திய நிலத்தில் **விதை என்கிற** வசனம் **விதைக்கப்படுகிறது** மாற்-4:14. அவர்கள் (நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்) வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையு மான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள். லூக்-8:15

இதுவரையும் தேவ வசனம் உங்களில் விதைக்கப்படாவிட்டால்….நீங்கள் ஒரு வறண்ட ஜீவிதம் ஜீவித்துக்கொண்டிருப்பீர்களானால்..

இன்றே ஒரு தீர்மானத்தை எடுங்கள்.. நாதன் இயேசுகிறிஸ்துவுக்கு உங்களை அற்பணியுங்கள்.

அப்பொழுது

வெட்டாந்தரை தண்ணீர்த்தடாகமும், வறண்ட நிலம் நீரூற்று களுமாகும் ஏசா-35:7

தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், எனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்.
1யோவா-3:9